# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்தல் | 2 பிப்ரவரி 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:

சூழலியல் (பணித்துவம்) அன்னை பூமியைக் காப்பாற்றும் துரித தூதுரைப் பணி செய்யும் உரிமையை ஏற்றுக்கொள்ள அழைப்பு

# ஒரு சிறப்பு தூதுரைப்பணியின் பொறுப்பாளர்கள்

இன்றைய முதல் வாசகத்தில் கடவுள், தம்முடைய தூதுவன் வழியாக, கோவிலில் உள்ளவர்களுக்கு எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றித் தோன்றுவார் என்று அறிவிப்பதை முதல் வாசகத்தில் வாசிக்கிறோம். அவர் அவ்வாறு தோன்றும்போது, புடமிடுகிறவரின் நெருப்பைப் போலும் சலவைத் தொழிலாளியின் சவர்க்காரத்தைப் போலும் இருப்பார். கடவுள் அவர்களைத் தூய்மையாக்கி, பொன், வெள்ளியைப் போல அவர்களைப் புடமிடுவார் என்று குறிப்பிடப்படுகிறது. இன்றைய திருப்பாடல் ஆசிரியரும் கடவுள் தம் ஆலயத்திற்குள் வரும்போது, மக்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரிக்கவேண்டும் என்று அறிக்கையிடுகிறார்.



இருந்தபோதும், குழந்தை இயேசு கோவிலுக்கு வரும்போது, மக்களிடையே 'மகிழ்ச்சி ஆர்ப்பரிப்பு' இல்லை. அவரது பிரசன்னம் யாரையும் ஈர்க்கவில்லை. மோசே தந்த கட்டளைகளை நிறைவேற்ற இயேசுவின் பெற்றோர் மிகவும் அமைதியாக அவரை அழைத்து வருகிறார்கள். இருப்பினும் இரண்டு நபர்கள் ஒருவர் பின் ஒருவராக அவர்களை அணுகிவருகின்றார்கள். முதலாவது சிமியோன், தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு, பிற இனத்தாருக்கு மீட்பை அருளும் வெளிப்பாடு இதுவே என்றும் மெசியாவின் பணியில் துன்பத்தின் அவசியத்தையும் அறிவிக்கிறார். பின்னர் வயதில் முதிர்ந்த இறைவாக்கினரான அன்னா தூய ஆவியின் வழிநடத்துதலால் ஆட்கொள்ளப்பட்டு, கடவுளுக்கு நன்றி செலுத்தி, எருசலேமின் மீட்புக்காகக் காத்திருக்கும்' அனைவருக்கும் இயேசு மீட்பராக இருப்பார் என்று இறைவாக்குரைத்தார்.

ஆண்டவரைக் காணிக்கையாக்கி அர்ப்பணிக்கும் நாளைக் கொண்டாடும் வேளையில், இந்த மாதம் தீபகற்ப மலேசியாவில் உள்ள திருஅவையின் கவனம், சூழலியலில் இருப்பதை நினைவுகூர்வோம். ஆனால் இன்றைய கொண்டாட்டத்திற்கும் சூழலியலுக்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா? ஆம் இது பொறுப்பாளர்களின் கருத்து. சிமியோன் மற்றும் அன்னா இருவருக்கும் கடவுளிடமிருந்து ஒரு சிறப்பு செய்தியை அறிவிக்கும் பொறுப்பாளர்களாக ஒரு தனித்துவமான பணி வழங்கப்பட்டது. மேலும் அன்று தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட இந்த இருவரும் நம்பிக்கையோடு திருக்குடும்பத்தாரிடம் நெருங்கிவந்து தங்களிடம் ஒப்படைத்த செய்தியை கோவிலில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உண்மையாகப் பகிர்ந்து கொண்டனர்.

சிமியோனும் அன்னாவும் தங்கள் பொறுப்பை நிறைவேற்றியது போல், நம் ஒவ்வொருவருக்கும் நல்ல பொறுப்பாளர்களாக செயலாற்றும் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒரு பொறுப்பாளர் என்பவர், பிறருக்கு உரிமையானதை அக்கறையுடனும், அர்ப்பணிப்பு உணர்வுடனும் மேற்பார்வை அல்லது கவனிக்கும் கடமையைக் கொண்டவர். கடவுளின் பிள்ளைகளாகிய நாம், கடவுளின் படைப்பைப் பேணி பாதுகாக்கும் ஒரு பணியை மேற்கொண்டுள்ளோம். திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு நினைவூட்டுவதுபோல," நாம் கடவுள் அல்ல; நமக்கு முன்பே இப்பூமி இருந்தது. நமக்காகக் கொடுக்கப்பட்டுள்ளது (லாவ்டாதோ சி 67) கடவுளின் படைப்பை அக்கறையாக கவனித்துக்கொள்ளும் நமது பணியை நிறைவேற்றுவோம்.

> இந்த உலகத்தை கடந்த தலைமுறையினரிடமிருந்து நாம் பெற்றோம். ஆனால் அதேவேளையில் எதிர்காலத் தலைமுறையினரிடமிருந்து கடனாகவும் பெற்றுள்ளோம். அதை அவர்களுக்குத் திருப்பித் தரவேண்டும்.
>
> திருத்தந்தை பிரான்சிஸ்

**இன்றைய இறைவார்த்தை:**

மலாக்கி 3: 1-4

திருப்பாடல்: 24: 7-10

எபிரேயர் 2: 14-18

லூக்கா 2: 22-40

INTERNAL CIRCULATION ONLY
BUL 05/2025

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org